**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 24/2026 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு. தங்க குருநாதன் |
| Husband/Father Name | பாஸ்கரன் |
| Village /Area | வத்திராயிருப்பு |
| Taluk | விருதுநகர் |
| Occupation | ஆய்வாளர் |
| Age | 46 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.06.2026.

**(எதிரி கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருவண்ணாமலை நகர குற்ற பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் அரக்கோணம் நகர காவல் நியைலத்தில் பணிபுரிந்த போது உதவி ஆய்வாளர் திரு.சிரஞ்சீவிலு அவர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்த அரக்கோணம் நகர காவல் நிலைய குற்ற எண்.382/2025 U/s.7(1a) CLA Act r/w.25(1A) of Arms Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்த வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு 11.06.2025 அன்று வைத்தனர். வழக்கு கோப்பை பெற்ற நான் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொண்டு சாட்சிகளாக முதல் நிலை காவலர் 547 முகமது மைதீன், காவலர் 101 தமிழினியன் ஆகியோரை விசாரணை செய்த போது உதவி ஆய்வாளர்களடம் சொன்ன அதே வாக்குமூலத்தை என்னிடம் கூறியதால் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு விசாரனை புலனாய்வு செய்து முடித்து எதிரியின் மீது பிரிவு 7(1a) CLA Act r/w.25(1A) of Arms Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கில் தனி நபர் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் முதல் மூன்று சாட்சிகளும் என் கீழ் பணிபுரியும் நபர்கள் என்று சொன்னால் சரிதான்.

வழக்கு கோப்பின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்

என்று சொன்னால் சரிதான். பொது நபர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் புகார்தாரரும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவர் சிரஞ்சீவிலு என்று சொன்னால் சரிதான். நடக்காத சம்பவத்திற்காக நான் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.06.22 16:35:27 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.